
குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள்



# துதிப்பாடல்கள்

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள்

# துதிப்பாடல்கள்



மாரிதன் மலரடி ஓங்க
மண்மிசைத் தலமுமோங்க
சீரிய பதியுமோங்க
சிறப்புறு மனைக ளோங்க
வீரிய மைந்த ரோங்க
விளைபயிர் மண்ணிலோங்க
பேரிடர் களைவாய் மாரி
பெற்ற நின் சீரடிகள் போற்றி

வெளியீடு : குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம்

09-01-2009

**“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை.........”**

தித்திக்கும் இத் திருவெம்பாவை பாடல்கள் குரும்பசிட்டி மக்களை ஒரு தடவையேனும் கிராமத்து மண்ணை நினைக்க வைக்கும் சக்திபடைத்தவை. இதற்கு விதி விலக்காக யாராவது இருப்பார்களாயின் அது 25 வயதுக்குட் பட்ட இளைஞர் மற்றும் சிறுவர்களாகத் தான் இருக்க முடியும். ஏனெனில் எமது கிராமத்து மண் வாசனையை நுகரமுடியாத துர்ப்பார்க்கியசாலிகளாக இருப்பவர்கள் இந்த வயதுக்குட்பட்ட பரம்பரையினர்தான். இது அவர்கள் குற்றமல்ல இடப்பெயர்வின் தாக்கம்.

திருவெம்பாவை காலமே குரும்பசிட்டி அருள் மிகுமுத்துமாரி அம்பாள் ஆலய மகோற்சவ காலமாகவும் அமைந்தமை அடக்கமான எமது சிறு கிராமத்தில் அம்பாளின் கொடியேற்றம் என்றால் அது கிராமத்தின் கொடியேற்றம் என்றளவுக்கு மக்கள் மனத்தில் ஒரு உணர்வை ஏற்படுத்திவிட்டது.

அதிகாலை வேளையிலே வீதி தோறும் துயிலெழுப்பி நிற்கும் திருவெம்பாவைப் பாடல்கள். ஊரவரையும் அயலவரையும் அழைத்து ஊர் எல்லைவரை ஒலியெழுப்பும் ஆலயத்தின் மணியோசை... சைவத்தையும் தமிழையும் சங்கமிக்க வைத்து நிற்கும் சைவப்பிரசங்கங்கள். இவற்றை யெல்லாம் கேட்காத செவி என்ன செவியோ என்ற மனநிலையில் மார்கழி மாதத்தை மக்களின் மனம் நிறைந்த மாதமாக்கி அருள் பாலித்து நின்றது முத்துமாரி அம்பாள் ஆலயம்.

குரும்பசிட்டி மண்ணின் புழுதியில் குளித்தவர்களுக்கு இந்த அனுபவங்களை மறக்கவும் முடியாது இவற்றின் இழப்புக்களை ஜீரணித்துக் கொள்ளவும்முடியாது.

அம்பாள் திருவுலா வந்த அந்த திருவீதி... அடியார்கள் மெய்வருந்தி அங்கப்பிரதஸ்டை செய்த அந்த திருவீதி... இன்று முட்கள் பற்றைகள் புதர்களால் மூடப்பட்டுக் கிடக்கிறது. ஆலயம் அமைந்த இடத்தை அடையாளம் காட்ட முடியாதளவுக்கு பற்றைக்காடுகள் மொத்தத்தில் கிராமமே இடுகாடாகி கிடக்கிறது.

ஊரைத்துறந்து உறவுகளைப் பிரிந்து நாட்டின் பல பாகங்களிலும் வெளிநாடுகளிலும் சிதறுண்டு கிடக்கும் எமது கிராமத்து உறவுகளின் மனங்களில் வாழ்க்கையின் அர்த்தத்தை கேள்விக்குறியாக்கி நிற்கின்றன நிகழ்கால நிகழ்வுகள்.

என்றாலும் எமக்கெல்லாம் கல்வியறிவூட்டிய அறிவாலயம் நாம் துதித்துவந்த ஆலயங்கள் எம்முடன் ஒட்டி உறவாடிய பொதுப்பணி மன்றங்கள்இவற்றின் நினைவுகளை எம்மனங்களில் இருந்து பிரித்துவிட முடியாது.இந்நினைவுகளைச் சுமந்து நிற்கும் பரம்பரையொன்று இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த வகையில் இடம்பெயர்ந்த நிலை யிலும் ஆண்டு தோறும் திருவெம்பாவை கால வழிபாட்டு நிகழ்வுகளை குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம் தனக்குரிய பணியாக முன்னெடுத்து வருவது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

1992 ஆம் ஆண்டில் இருந்து திருவெம்பாவை காலத்து 09 ம் நாள் (முத்துமாரி அம்பாள் தேர்த்திருவிழா) அன்று பூஜை பஜனை அன்னதானம் ஆலய குருமார் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் ஏழாலை தெற்கு வசந்தபுரம் அருள்மிகு வசந்த நாகபூசனி அம்பாள் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் எமது கிராமத்து உறவுகளுக்குஅம்பாளின் அருளாசி வேண்டியும் அவர்களது உடல் உள நலன் வேண்டியும் நடாத்தப்படும் இந்நிகழ்வுகளுக்கு எமது மக்கள் தங்கள் வேண்டுதல் களுக்காக அளிக்கும் நிதி உதவிகள் பெரிதும் துணைநிற்கின்றன.

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம், 41 வது ஆண்டு நிறைவை எட்டியுள்ள நிலையில் இவ்வாண்டு நடத்தப்படும் பூஜை வழிபாட்டு நிகழ்வுகளுடன்அருள் மிகு முத்துமாரி அம்பாள் துதிபாடும் பாடல்களைத் தாங்கிய இச்சிறு நூலையும் வெளியிடுவதில் நாம் பெருமையும் மன நிறைவும் அடைகிறோம்.

**வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன் முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க**
**நான் மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

**- குரும்பசிட்டி வளர்மதி சன சமூக நிலையம்**

உ

சிவமயம்

# குரும்பசிட்டி
# அம்பாள் திருவூஞ்சல்

## வெண்பா

பூமா துறைகுரும்பை பொற்பதிவாழ் மாரிதன் மேற்
பாமாலை பாடிப் பணிந்திடவே - மாமாது
உமைபரனார் தந்த வொருகோட்டுப் பிள்ளை
கமல வடியிணைகள்காப்பு.

## ஊஞ்சல்

பொன்பூத்த பரவொளியா யேக னாகிப்
புகழ்பூத்த வனாதிமுத்த பதியாய் நின்ற
தென்பூத்த பரசிவனார் சக்தி யாகித்
திடம்பூத்த திருக்குரும்மை நகரின் வாழும்
இன்பூத்த மகமாரி யம்மை மீதே
எழில்பூத்த வூஞ்சலிசை யினிது பாட
மன்பூத்த பிரணவத்தின் பொருளா யோங்கும்
மறைபூத்த கணபதிதாள் வணங்கு வாமே.

நலனோங்கு நால்வாக்குங் கால்க ளாக
நயனோங்கு நாதவிந்து விட்ட மாகப்
பலனோங்கு வர்ணவின மிளைய தாகப்
பரமோங்கு மாகமங்கள் கயிற தாகப்
புலனோங்கு மந்திரங்கள் பலகை யாகப்
புகழோங்கு பிரணவமே பீட மாக
வலனோங்கு திருக்குரும்பைநகரின் வாழும்
மகமாரி யம்மையையே யாடீ ரூஞ்சல்.

திருவளருஞ் செம்பவளக் கால்க னாட்டிச்
சீர்வளரு மரகதநல் விட்ட மூட்டிக்
குருவளரும் பசுங்கனகக் கயிறு பூட்டிக்
குணம்வளரும் வச்சிரத்துப் பலகை மாட்டி
உருவளரு மயனுயர்செம் மணிக ளீட்டி
ஒளிவளரும் வகையமைந்தவூஞ்சன் மீதே
மருவளரும் பொழிற்குரும்மை நகரின் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல்.

பூமேவு மயன்வேத நாத மூட்டப்
பொலன்மேவு நாராணனார் தூபங் காட்ட
நாமேவுங் கலைமகள்பல் லாண்டு நாட்ட
நலமேவுங் கமலமலர் மாரி நீட்ட
சீமெவும் விஞ்சையர்கள்கான மீட்ட
விண்மேவு மரமகளீர் வடந்தொட் டாட்ட
மாமேவுந் திருக்குரும்பை நகரின்வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல்.

சேண்பொலியு மதிபருதி கவிகை தாங்கத்
திறம்பொலியுஞ் சதாகதிசா மரைகைவாங்க
ஏண்பொலியும் விபுதர்வட்டம் வீசித் தேங்க
இயல்பொலியும் பூமழைவின் ணின்று தூங்கப்
பூண்பொலியுந் திருமுதலோர் மகிழ்ச்சி வீங்கப்
புடைபொலியு மடியரிரு வினைக ளோங்க
மாண்பொலியுந் திருக்குரும்பை நகரின்வாழும்
மகமாரி யம்மையை யாடீ ரூஞ்சல்.

மேல்விளங்குங் கந்தருவர் சுருதி கூட
வியன்விளங்கு மிந்திரனார் தாளம் போடப்
பால்விளங்குந் தும்புருநா ரதர்பண் பாடப்
பயன்விளங்கு பல்லியநல் லொலிவிண் மூட
நூல்விளங்கு மிடைமடவார் நடன மாட
நுவல்விளங்குந் தமிழ்வேத வோசை நீட
மால்விளங்குந் திருக்குரும்மை நகரின் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல்.

சொல்லியலுந் தூயவுள மன்பு கூரத்
துதியியலுந் நாக்கடிருப் புகழை நேர
வெல்லியலுங் கரங்கள் சிர மீது சேர
வெழிலியலு மானந்தக் கண்ணீர் வார
வில்லியலும் வெண்ணீற்றி னணிநன் கார
மிக்குயலும் பக்தர்குழாம் விரவிச் சார
மல்லியலுந் திருக்குரும்பை நகரின் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல்.

பொன்னிலங்கு சிரமௌலி பொலிந்து ஆடப்
பொற்பிலங்கு மிடையினம ராடை யாடத்
தென்னிலங்குங் கொங்கைமிசை மணிப்பூ ணாடத்
திறமிலங்கு செங்கையிசை வளைக ளாட
மின்னிலங்குங் குழைவளர்தா டங்க மாட
மிசையிலங்குங் குழலிடைப்பூந்தொடைநின் றாட
மன்னிலங்குந் திருக்குரும்பை நகரின் வாழும்
மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல்.

சிரஞ்சிறந்த தொடையினரே யாடீ ரூஞ்சல்

சீர்சிறந்த விடையினரே யாடீ ரூஞ்சல்

பரஞ்சிறந்த மேன்மையரே யாடீ ரூஞ்சல்

பயன்சிறந்த பான்மையரே யாடீ ரூஞ்சல்

திரஞ்சிறந்த தூய்யவரே யாடீ ரூஞ்சல்

சிவஞ்சிறந்த மெய்யவரே யாடீ ரூஞ்சல்

வரஞ்சிறந்த திருக்குரும்பை நகரின் வாழும்

மகமாரி யம்மையே யாடீ ரூஞ்சல்

வீண்மருவுஞ் சோதியரே யாடீ ரூஞ்சல்

வியன்மருவு மோதியரே யாடீ ரூஞ்சல்

எண்மருவும் விபுதியரே யாடீ ரூஞ்சல்

இசைமருவுமனாதியரே யாடீ ரூஞ்சல்

பண்மருவு மொழியினரே யாடீ ரூஞ்சல்

படைமருவு விழியினரே யாடீ ரூஞ்சல்

மண் மருவுந் திருக்குரும்பை நகரின்வாழும்

மகமாரி யம்மையேயாடீ ரூஞ்சல்

பூர்த்திபெறு திருவருளைந் தெழுத்தும் வாழி

புகழ்ச்சிபெற விபூதியக்கு மணியும் வாழி

கீர்த்திபெறு நிகமமொடா கமங்கள் வாழி

கிளர்ச்சிபெறு மாதிசைவர் முதலோர் வாழி

மூர்த்திபெறு முளத்தடியார் தொகுதி வாழி

முறைமைபெறு முகிலரசர் சுரபி வாழி

சீர்த்திபெறு திருக்குரும்பை நகரம் வாழி

சிறந்தமக மாரியம்மை வாழி வாழி.

திருச்சிற்றம்பலம்.

# துதிப்பாடல்கள்

## கூடிப்பாடுவோம்

கூடிப்பாடுவோம் நாங்கள் கூடிப்பாடுவோம்
குவலயத்து நாயகியைக் கூடிப்பாடுவோம்
குலங்காக்கும் நாயகியைக் கூடிப்பாடுவோம்-எங்கள்
குரும்பைநகர் மாரியை நாளும்பாடுவோம்

- கூடிப்பாடுவோம் -

தாய் இருக்கும் தலமெங்கும் தேடிப்பாடுவோம்
தாயே மகமாரி என்று கூவிப்பாடுவோம்
வாயார மனமாற வாழ்த்திப்பாடுவோம்- எங்கள்
குரும்பைநகர் மாரியை நாளும்பாடுவோம்

- கூடிப்பாடுவோம் -

தேன்சுரக்கும் மலர்தூவி நாளும் பாடுவோம்
அருள்சுரக்கும் ஆலயத்தில் அமர்ந்து பாடுவோம்
ஊன்உருக உளமுருக உரத்துப்பாடுவோம்- எங்கள்
குரும்பைநகர் மாரியை நாளும் பாடுவோம்

- கூடிப்பாடுவோம் -

பால் பழங்கள் சாத்திநிதம் தாயைப்பாடுவோம்
பாசமுடன் எமை வளர்த்த தாயைப்பாடுவோம்
கால்வலிக்க கரம்விறைக்க உருகிப்பாடுவோம்-எங்கள்
குரும்பைநகர் மாரியை நாளும் பாடுவோம்

- கூடிப்பாடுவோம் -

தைப்பொங்கல் தைப்பூசம் தாயைப்பாடுவோம்
மாசிமகம் சிவராத்திரி மகிழ்ந்துபாடுவோம்
பங்குனியில் உத்தரத்தில் பணிந்துபாடுவோம்-எங்கள்
குரும்பைநகர் மாரியை நாளும் பாடுவோம்

- கூடிப்பாடுவோம் -

சித்திரையில் பௌர்ணமி நாள் தாயைப்பாடுவோம்
வைகாசி விசாகமதில் வணங்கிப்பாடுவோம்
ஆனிதனில் உத்திரத்தில் அவளைப்பாடுவோம்-எங்கள்
குரும்பைநகர் மாரியை நாளும்பாடுவோம்

- கூடிப்பாடுவோம் -

ஆடிதனில் பூரத்தினில் அவளைப்பாடுவோம்
ஆவணிநாள் மூலம் ஓணம் அவளைப்பாடுவோம்
புரட்டாதி நவராத்திரிநாள் பகழ்ந்து பாடுவோம்-எங்கள்
குரும்பைநகர் மாரியை நாளும்பாடுவோம்

- கூடிப்பாடுவோம் -

ஐப்பசியில் கௌரிநோன்பில் உருகிப்பாடுவோம்
கார்த்திகையில் தீபவொளி ஏற்றிப்பாடுவோம்
மார்கழியில்பாவைநோன்பில் தாயைப்பாடுவோம்-எங்கள்
குரும்பைநகர் மாரியை நாளும்பாடுவோம்

- கூடிப்பாடுவோம் -

தாயவளின் அருளாசி வேண்டிப்பாடுவோம்
சாந்தி தரும் வெண்ணீறு பூசிப்பாடுவோம்
அடிதொழுது உருண்டழுது தாயைப்பாடுவோம்- எங்கள்
குரும்பைநகர் மாரியை நாளும்பாடுவோம்

- கூடிப்பாடுவோம் -

# மகமாரி மாகாளி

மகமாரி மாகாளி
மகுசாசுர வர்த்தனி
திரிசூலி மூலாம்பிகைத் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

அருவாகி உருவாகி
கருவாகி உயிராகி
திருவாகி நின்ற எங்கள் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

உயிராகி உளமாகி
உணர்வாகி உறவாகி
உயர்வாகி நின்ற எங்கள் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

விண்ணாகி மண்ணாகி
பெண்ணாகி ஆணாகி
கண்ணாகி நின்ற எங்கள் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

எண்ணாகி எழுத்தாகி
பண்ணாகி பதமாகி
கண்ணாகி நின்ற எங்கள் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

நீராகி நெருப்பாகி
நிழலாகி வெயிலாகி
மழையாகி நின்ற எங்கள் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

ஆறாகி கடலாகி
அலையாகி அணையாகி
அமுதாகி நின்ற எங்கள் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

மொட்டாகி மலராகி
காயாகி கனியாகி
சுவையாகி நின்ற எங்கள் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

பிணியாகி மருந்தாகி
துயராகி துணையாகி
விதியாகி நின்ற எங்கள் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

மூச்சாகி பேச்சாகி
கலையாகி புகழாகி
தமிழ் சுவையாகி நின்ற எங்கள் தாயே
குரும்பைநகர் மேவு மகமாரி நீயே

# நலங்காக்கும் நாயகியே

நலங்காக்கும் நாயகியே - எங்கள்
நாவிலுறையும் தெய்வம் நீ
தலங் கொண்டாய் குரும்பைநகர் - எங்கள்
தாயே ஓடி வந்திடம்மா

- நலங்காக்கும் -

கூவி அழைத்தும் கேட்கலையோ - எங்கள்
குரலில் ஈரம் காட்டாயோ
ஆவி துடித்தே அலறுகின்றோம் - எங்கள்
அம்மா ஓடி வந்திடம்மா

- நலங்காக்கும் -

பாடும் பாக்களும் உனக்கன்றோ - நாம்
போடும் பூக்களும் உனக்கன்றோ
வாடும் பயிராய் நாங்கள் எல்லாம் - எங்கள்
அம்மா ஓடி வந்திடம்மா

- நலங்காக்கும் -

கருவில் கேட்டதும் உன் நாமம் - நாம்
கனவில் காண்பதும் உன் உருவம்
காடு மேடு தெருவினில் நாம் - எங்கள்
அம்மா ஓடி வந்திடம்மா

- நலங்காக்கும் -

வாட்டும் நோய்க்கு அருமருந்தே - எங்கள்
வாட்டம் தீர்க்கும் நல் மருந்தே
நாம் பனியில் குளிரில் கடும் போரில் - எங்கள்
அம்மா ஓடி வந்திடம்மா

- நலங்காக்கும் -

# நின்னருள் வேண்டுகின்றோம்

நின்னருள் வேண்டுகின்றோம் - அம்மா
நின்னருள் வேண்டுகின்றோம்.

அன்புறு குரும்பை
நகரினில் மேவிய
அன்னையே அபிராமி - உன்
கண்களில் அருள் மாரி
-நின்னருள்...

நீறணி நெற்றியில்
நிலைத்தது உன் நாமம்
என்றென்றும் எமைக்காக்கும்-புகழ்
எத்திசையும் பரப்பும்
-நின்னருள்..

வாட்டிடும் நோய்கள்
வருத்திடும் தீவினைகள்
நீட்டிய உன் கரத்தால்-என்றும்
நீங்கிடும் நீ அருள் சுரந்தால்
-நின்னருள்

சீரழிந்த பதியும்
சிதைந்த நம் உறவுகளும்
கலங்கிடும் மக்கள் உள்ளம்-அதை
மாற்றிடும் அருள் மாரி வெள்ளம்
-நின்னருள்...

அகதி எம் நிலைமாறி
இன்புற நாம் வாழ
அன்னையே அபிராமி-என்றும்
இன்னருள் தருவாய் நீ -நின்னருள்...

# நித்திலம் உன் மணி ஒலிக்க

நித்திலம் உன் மணி ஒலிக்க
நினைந்துருகும் பக்தர் நெஞ்சில்
முத்து மாரி உந்தன் திருநாமம்-என்றும்
முத்தமிழில் கலந்ததம்மா நகர் நாமம்
குரும்பை நகர் நாமம்

மார்கழி நீராடி நின்று
மாண்புடனே நோன்பிருந்து
தேர் வடத்தில் கரம் பிடித்த போதினிலே-எங்கள்
மேனியெங்கும் கலந்ததம்மா அருளாட்சி
குரும்பை நகர் மாட்சி

ஆதிரையில் பௌர்ணமி நாள்
அன்னை பராசக்தி அவள்
மேனிதனைக் குளிரவைத்தோம் தீர்த்தத்திலே-எங்கும்
மேவி நிலை கொண்டதம்மா அருளாட்சி
குரும்பை நகர் மாட்சி

தென் மயிலைக் குரும்பை நகர்
தெள்ளு தமிழ் வளர் பொய்கை
தேன்சுவையில் அதன் நாமம் ஒலிக்கையிலே-எங்கும்
நிலைத்த தம்மா அன்னையவள் அருளாட்சி
- குரும்பை நகர் மாட்சி

## தாயே மகமாரி

தாயே மகமாரி எங்கள்
தாயே மகமாரி
தருவாய் வரங்கோடி - நாம்
வந்தோம் உனைநாடி

- தாயே மகமாரி -

ஊரே கலைந்தாலும்
உறவுகள் பிரிந்தாலும்
ஊணே மறந்தாலும்
உளத்தினில் உன் நாமம்
ஒரு நாள் ஒரு பொழுது
நினைந்திடும் பேறினை நீ
தருவாய் மகமாரி - எங்கள்
தாயே மகமாரி

- தாயே மகமாரி -

இல்லங்கள் அழிந்தாலும்
இடரினில் தளர்ந்தாலும்
இன்பத்தில் மிதந்தாலும்
இதயத்தில் உன் நாமம்
ஒரு நாள் ஒரு பொழுது
நினைந்திடும் பேறினை நீ

தருவாய் மகமாரி - எங்கள்
தாயே மகமாரி

- தாயே மகமாரி -

பாயினில் படுத்தாலும்
நோயினில் துவண்டாலும்
பந்த பாசங்கள் பிரிந்தாலும்
பாவியேன் உன் நாமம்
ஒரு நாள் ஒரு பொழுது
நினைந்திடும் பேறினை நீ
தருவாய் மகமாரி - எங்கள்
தாயே மகமாரி

- தாயே மகமாரி -

## உன் நாமம் என் நாவில்

உன் நாமம் என் நாவில்
உயிர் மூச்சாய் கலந்தொலிக்கும்
உன் அருளில் நான் பாட
உயர் குரும்பை நகர் மணக்கும்

-உன் நாமம்-

தித்திக்கும் உன் நாமம்
தீந்தமிழில் கலந்தொலிக்கும்
பக்தியுடன் நான் பாட
பைந்தமிழின் சுவை மணக்கும்

-உன் நாமம்-

நித்திலமும் உன் நாமம்
கலந்தாலய மணி ஒலிக்கும்
நினைந்துருகும் பக்தர்களை
நிம்மதியாய் அது எழுப்பும்

-உன் நாமம்-

சித்தி தரும் உன் நாமம் எம்
சிந்தை எல்லாம் கலந்தொலிக்கும்
சினம் காக்கும் பக்தர் வினை
சிதறடித்தே அது போக்கும்

-உன் நாமம்-

தித்திக்கும் திருவெம்பா
தீஞ்சுவையில் கலந்தொலிக்கும்
முத்தி தரும் உன் நாமம்
எத்திக்கும் தினம் ஒலிக்கும்

-உன் நாமம்-

## குரும்பை நகர் மாரியம்மா

குரும்பை நகர் மாரியம்மா
குலங் காக்கும் நாயகியே
வரும் இடர்கள் போக்கிவிடு
பார்வதியே மகமாரி

- குரும்பை நகர் -

கார் முகிலாய் கடுமழையாய்
களனி யெல்லாம் நிறைந்திடுவாய்
பார் புகழும் நாயகியே
பார்வதியே மகமாரி

- குரும்பை நகர் -

விதி முடிக்கும் வினை அறுக்கும் உன்
வீரத்தின் விழி அசைவு
பதி காப்பாய் பகையறுப்பாய்
பார்வதியே மகமாரி

- குரும்பை நகர் -

சாவினிலும் உன் நாமம்
சாந்தி தரும் உன் பாதம்
பாவி எமைக் காத்திடுவாய்
பார்வதியே மகமாரி

- குரும்பை நகர் -

கண் திறப்பாய் கரமசைப்பாய்
கண்ணளவளே கருமாரி
தண்மதியே தாய் நீயே
பார்வதியே மகமாரி

- குரும்பை நகர் -

# குரும்பை நகர் மண் குளிர்ந்தது

குரும்பை நகர் மண் குளிர்ந்தது - அவள்
குன்றா அருளில் தலை நிமிர்ந்தது
உருகும் மாந்தர் உளமெல்லாம் - முத்து
மாரி அருளில் நிறைந்தது

- குரும்பை நகர் -

கரும்பின் சுவை கொள் நீரிலே
கருமாரி கலந்தே ஓடினாள்
அரும்பும் பயிரின் அசைவிலே - எங்கள்
அன்னை நர்த்தனம் ஆடினாள்

- குரும்பை நகர் -

கல்வி செல்வம் கலை வளம்
கருமாரித் தாயின் அருள் வளம்
இல்லமெங்கும் ஒளிச்சுடர் - அவள்
ஏற்றி ஒழித்தாள் நம்மிடர்

- குரும்பை நகர் -

திருவெம்பாவை தினத்திலே
திருவீதி வந்தாள் ரதத்திலே
உருகும் பாவை நோன்பிலே - அவள்
ஆடி நின்றாள் திருவூஞ்சலே

- குரும்பை நகர் -

அன்னை ஊஞ்சல் ஆடிடி
அருள் மாரி மழையில் மகிழ்ந்திட
செம்மண் குளிர்ந்தே சிலிர்த்தது - எங்கும்
செந்தமிழின் சுவையில் மணத்தது

- குரும்பை நகர் -

# பார்வதி அம்மா இனி யார்கதி அம்மா

பார்வதி அம்மா இனி யார்கதி அம்மா
பார்வதி அம்மா இனி யார்கதி அம்மா

பாட்டினிலே பொருளானாய்
பார்வதி அம்மா - பண்
பாட்டினிலே உயிரானாய்
பார்வதி அம்மா
வீட்டினிலே விளக்கானாய்
பார்வதி அம்மா - எங்கள்
விளை நிலத்தில் பயிரானாய்
பார்வதி அம்மா

பார்வதி அம்மா இனி யார்கதி அம்மா
பார்வதி அம்மா இனி யார்கதி அம்மா
நீராகி மேதினியைக்
குளிர வைத்தாய் - நீ
நிழலாகி எமைக் காத்து
அமைதி தந்தாய்
காற்றாகி எம் மூச்சில்
கலந்து நின்றாய்-கொடும்
தீயாகி துயர் பிணிகள்
துடைத் தெறிந்தாய்
பார்வதி அம்மா இனி யார்கதி அம்மா
பார்வதி அம்மா இனி யார்கதி அம்மா

நெற்றியிலே நீறாகி
நிலைத்து நின்றாய் - எங்கள்
வெற்றியிலே பொருளாகி
ஏற்றந் தந்தாய்
பற்றிய நின் பதமலரில்
அமைதி தந்தாய் - நாம்
பார்க்கும் இடம் அத்தனையும்
நீயே நிறைந்தாய்

பார்வதி அம்மா இனி யார்கதி அம்மா
பார்வதி அம்மா இனி யார்கதி அம்மா

அரச மர நிழலானாய்
அமைதி தந்தாய்-எங்கள்
ஐம்புலனில் உணர்வாகி
கலந்து நின்றாய்
பரவசமாய் உனைப்பாடும்
அருள் சுரந்தாய்-எங்கள்
குரும்பை நகர் பதியதனில்
தலமுங் கொண்டாய்